TNVR090001212019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.

முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,

சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18–ஆம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண். 1/2020

இன்

முதலேற்பு வழக்கு எண்.65/2019

R. ஆறுமுகம் ... மனுதாரர்/உத்தேச 2–ஆம் பிரதிவாதி

/எதிர்/

1. விருதுநகர் கோட்டைப்பட்டி
   இந்து எர்ற கொல்ல இராஜகம்பள
   (தொட்டிய நாயக்கர்) நாயக்கர் பொது
   நலச்சங்கம் அதன் கலைவர் மூலம் ... 1–ஆம் எதிர்மனுதாரர்/வாதி

2. ஆணையாளர்,
   விருதுநகர் நகராட்சி. ... 2–ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 31.01.2020–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. I. இராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.V. நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரவி அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும், எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில்

இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் மனுதாரர்/உத்தேச 2–ஆம் பிரதிவாதியை அசல் வழக்கில் 2–ஆம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151 சி.பி.சி.–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் உத்தேச 2–ஆம் பிரதிவாதியாக உள்ளார். அசல் வழக்கில் அசல் வழக்கு வாதி, பிரதிவாதி மீது நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டுள்ளார். அதற்கு அசல் வழக்கில் ஏற்கனவே பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். பிராது மற்றும் எதிர்வழக்குரை விவரங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு மாறானது மற்றும் உள்நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. அசல் வழக்கு சொத்தானது ஒருபோதும் வாதி சார்ந்துள்ள பொதுநல சங்கத்துக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல. அது முழுவதும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அதை முழுவதும் அபகரித்திட திட்டம் தீட்டிய வாதி சங்கத்தினர் போலி ஆவணங்களை உருவாக்கி அதன் அடிப்படையில் அப்போது இருந்த பிரதிவாதி அலுவலர்களை சரிகட்டி அதன் மூலம் முன் ஆவணங்கள் முறையாக வாதி சங்கத்தின் பெயரில் இல்லாத நிலையிலும், தபசில் சொத்திற்கு தீர்வை ரசீதுகளை தங்கள் பெயருக்கு உருவாக்கிக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் அதை தட்டிக் கேட்க எண்ணிய இந்த நம்பர் மனுதாரர் அது குறித்து முறையாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம் நடுவத்திடம் கடந்த 01.08.2018 தேதியன்று புகார் செய்தார். அதன் அடிப்படையில் மேற்படி புகார் மனுவானது மேற்படி முறைமன்ற நடுவத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, உரிய ஆவணங்களை தாவா வழக்கு

பிரதிவாதி கொண்டு வந்து, முறை மன்றத்திலும் முறைமன்ற நடுவத்திடம் சமர்ப்பிக்க உத்தரவிட்டதாகவும், மேற்படி விசாரணை நிகழ்வுகளின் தொடர்ச்சியாக கடந்த 10.10.2019–ஆம் தேதியன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், தபசில் சொத்து முழுவதும் தாவா வழக்கு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை ஆவணங்கள் அடிப்படையில் உறுதி செய்து, ஒரு உத்தரவு பிறப்பித்தது என்றும், அந்த உத்தரவின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதி சங்கத்தினர் ஆக்கிரமித்து எழுப்பி உள்ள கட்டுமானங்களை உடனடியாக அகற்றி, தபசில் சொத்தை பிரதிவாதி முழுவதும் கைப்பற்ற வேண்டும் என உத்தரவிட்டதாகவும், ஆனால், அதை பிரதிவாதி முறையாக செய்யவில்லை என்றும், உத்தரவிலேயே தாவா வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளதை கோடிட்டு காண்பித்து, அதன் பின்னரே ஆவணங்களின் அடிப்படையில் பிறப்பித்துள்ளதாகவும், இந்த சூழ்நிலையில் மேற்படி உத்தரவை ரத்து செய்ய கேட்டும், உத்தரவு செல்லாது என உத்தரவிட கேட்டும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. (MD) No. 27018/20119 மற்றும் 27088/2019 ஆகிய இரண்டு நீதிப்பேராணை மனுக்களை தாக்கல் செய்ததாகவும், அதில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் உள்ளிட்ட ஐந்து எதிர்மனுதாரர்களை எதிர் மனுதாரராக காட்டியுள்ளதாகவும், அதில் இந்த உத்தேச எதிர்மனுதாரர் ஐந்தாம் எதிர்மனுதாரராக உள்ளதாகவும், ஆனால் இரண்டு நீதிப்பேராணை மனுக்களிலும் மேற்படி மனுதாரர் ஒரு தரப்பினராக உள்ள நிலையில், இவ்வழக்கை பொறுத்து அசல் வழக்கில் மேற்படி மனுதாரர் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், எனவே, வழக்கு சொத்தை பொறுத்து அதன் உண்மையான நிலை மற்றும் உண்மையான உரிமையாளர் யார் என்பது பற்றிய சாட்சிகள் மற்றும் சான்றாவனங்களை தாக்கல் செய்து, வழக்கு விசாரணை நடைபெறும் அசல் வழக்கில் வேண்டுமென்றே இந்த நம்பர் உத்தேச மனுதாரரை ஒரு தரப்பினராக சேர்க்காமல் வாதி விட்டு

விட்டதாகவும், உண்மையில் கடந்த 01.08.2018 தேதியன்று பிரச்சினை குறித்து தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்பு முறைமன்ற நடுவத்திடம் வாதி சங்கம் மீது இந்த நம்பர் உத்தேச மனுதாரர் புகார் அளித்த பின்னர் தான், தாவா பிரச்சினை குறித்த வழக்கு மூலம் உருவானதாகவும், அதன் காரணமாகவே வழக்கை பிரதிவாதி மீது மட்டும் தாக்கல் செய்துள்ளதாகவும், உண்மையில் தாவா வழக்கிற்கு மூல காரணமாக இருந்த வழக்கு மூலம் உருவாவதற்கு காரணமான புகார் மனுவை உருவாக்கிய மனுதாரரை ஒரு தரப்பினராக வாதியானவர் அசல் வழக்கில் சேர்த்து இருக்க வேண்டும் என்றும், இருந்தாலும் வழக்கு சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா பிரதிவாதி மீது வாதி அசல் வழக்கு எண் 39/2019 தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வழக்கிலும் தாவா வழக்கு பற்றிய விவரங்களை வேண்டுமென்றே குறிப்பிடவில்லை என்றும், அதிலும் தன்னை தரப்பினராக சேர்க்க மனுதாரர் மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள தாவா சொத்தை ஒரு சமுதாய சங்கம் என்ற போர்வையில் ஒரு சிலர் சேர்ந்து அபகரித்திட வாதி சமூகத்தைச் சேர்ந்த இந்த நம்பருக்கு உத்தேசப் பிரதிவாதியை அசல் வழக்கில் வேண்டுமென்றே சேர்க்காமல் விட்டுள்ளனர் என்றும், உண்மையில் அசல் வழக்கு சொத்திற்கும், வாதி சங்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றும், விருதுநகர் மற்றும் குறிப்பாக கட்டபொம்மன் தெருவில் வசித்து வரும் தொட்டிய நாயக்கர் என்ற எர்ற கொல்ல இராஜகம்பல சமுதாயத்திற்கு ஏதோ தாங்கள் மட்டுமே ஒட்டுமொத்த பிரதிநிதிகள் என்ற தோற்றத்தை வாதிகள் உருவாக்கி உள்ளதாகவும், அது தவறானது என்றும், தாவா சொத்தை சமுதாயப் போர்வையில் ஆக்கிரமித்து வெளி நபர்களுக்கு விற்பனை செய்து, லாபம் சம்பாதிக்கும் நோக்குடன் தற்போதைய வாதி சங்கத்தில் நிர்வாகிகளாக தங்களை சொல்லிக் கொள்ளும் நபர்கள் செயல்பாடு திட்டம் தீட்டியுள்ளதாகவும், எனவே, மேற்படி

பிரச்சினைகளுக்கு தீர்வு கேட்டு, சட்ட போராட்டம் நடத்தி வரும் இந்த மனுதாரர் அசல் வழக்கில் ஒரு அவசிய தரப்பினர் என்றும், அந்த அடிப்படையில் அவரை ஒரு தரப்பினராக அசல் வழக்கில் சேர்த்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. <u>1–ஆம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது. மேற்படி மனுதாரருக்கு எதிராக வாதி சங்கமானது ஏற்கனவே வெளியேற்றுகை மனுவுடன் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளது. அதனால் வேண்டுமென்றே தீய எண்ணத்துடன் தவறான தகவலின் அடிப்படையில் புகார் அனுப்பியுள்ளார். மனுதாரருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. அவரது ஒரே எண்ணம் அவருக்கு எதிராக எங்கள் சங்கம் தாக்கல் செய்துள்ள சட்ட நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டும் என்பதே ஆகும். எனவே, அவர் வழக்கில் அவசிய தரப்பினர், தேவையான தரப்பினரோ அல்ல. மனுவானது சட்டப்படியோ சங்கதிப்படியோ நிலைக்கத்தக்கது அல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. தற்போது இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. மேற்படி மனுதாரர் அசல் வழக்கில் மூன்றாம் நபர் ஆவார். மேற்படி அசல் வழக்கானது மேற்படி 1–ஆம் எதிர்மனுதாரரால் 2–ஆம் எதிர்மனுதாரர் மீது

விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து உறுத்து கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மேற்படி மனுதாரர் கடந்த 01.08.2018–ஆம் தேதியன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் வாதி சங்கம் மீது புகார் அளித்ததன் பேரில் கடந்த 10.10.2019–ஆம் தேதியன்று ஒரு உத்தரவினை பிறப்பித்துள்ளது. மேற்படி உத்தரவில் நகராட்சி நிலம் ஆக்கிரமிப்புக்குள்ளாகி உள்ளது என நகராட்சி அலுவலர்கள் தெரிந்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் கண்டும் காணாமல் ஆக்கிரமிப்புக்கு துணை போய் உள்ளனர் என தெரிய வருகிறது என்று கூறியுள்ளது. மேலும், மேற்படி உத்தரவின் மீது மேற்படி 1–ஆம் எதிர்மனுதாரர்/வாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. (MD) No.27018/2019 மற்றும் 27088/2019 ஆகிய இரண்டு நீதிப்பேராணை மனுக்களை தாக்கல் செய்துள்ளார். இதை மேற்படி எதிர் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேற்படி இரண்டு மனுக்களிலும் மேற்படி மனுதாரர் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. மேலும், மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த புகாரின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பெயரில் தான் மேற்படி 1–ஆம் எதிர்மனுதாரர் இரண்டு நீதிப்பேராணை மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார். அதில் அவரே மேற்படி மனுதாரரை தன்னிச்சையாக ஒரு தரப்பினராக சேர்த்துள்ளார். மேற்படி தாவா வழக்கிற்கும், மேற்படி மனுதாரருக்கும் சம்பந்தமில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டிருந்தாலும், மேற்படி 10.10.2019–ஆம் தேதியிட்ட உத்தரவில் கடைகள் கட்டப்பட்ட நிலம் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என அறிந்தும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் பயன்படும் வகையில் நகராட்சி அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர் எனவும் அறிய முடிகிறது என்றும், நகராட்சி அலுவலர்களின் இத்தகைய செயல்கள் கடமை தவறிய செயலாகவே கருதப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கிற்கு மூல காரணமான மேற்படி மனுதாரர் மேற்படி 1–ஆம் எதிர்மனுதாரர் சங்கத்தின்

சமுதாயத்தை சேர்ந்த நபராக இருக்கின்ற நிலையில் அசல் வழக்கில் ஒரு அவசிய தரப்பினராகவே இருக்கிறார். எனவே, அவரை இவ்வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என்றே தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2020 இன்
மு.வ.எண்.65/2019
உத்தரவு நாள். 18.04.2024